Stadt Chur

# பாடசாலைக்கு வராதவர்க்கான சட்ட நடவடிக்கைகள்

**ஆரம்ப - மேல்வகுப்புகள் நகரப் பாடசாலை கூர் (வராதவர்களுக்கான சட்ட நடவடிக்கைகள்)**

---

13 சித்திரை 2018 இல் கூர் நகரப் பாடசாலைக் கல்வித் திணைக்களத்தால் முடிவுசெய்யப்பட்டது

அடிப்படைச் சட்டவிதிகள்:

- Graubünden மாநில மக்கள் பாடசாலைக்கான சட்டவிதிகள், உத்தரவுகள் உட்பட, 21 பங்குனி 2012 (BR 421.000, BR 421.010)
- கூர் நகரப் பாடசாலையின் பாடசாலைச் சட்டம், 14 கார்த்திகை 2013 (RB 711)

குறிப்பு: விளங்கிக்கொள்வதில் சந்தேகம் இருப்பின் டொச் பதிப்பு உகந்ததாகும்.

---

## பிரிவு 1 அடிப்படைத்தத்துவம்

1 பிள்ளைகளை சீராகவும் நேரகாலத்துடனும் பாடசாலைக்கு அனுப்ப வேண்டியது பெற்றோர், பராமரிப்பாளர்களின் கட்டாய கடமை. தவிர்க்க முடியாத காரணங்களின்றி பாடசாலை வகுப்புகளை தவறவிடக்கூடாது.

2 பாடசாலைக்கு வரமுடியாது இருப்பின் வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்பாக பொறுப்பான ஆசிரியருக்கு அறிவிக்க வேண்டும்.

## பிரிவு 2 நோய் மற்றும் விபத்துக் காரணமாக வராமலிருத்தல்

1 விசேடமாக சுகயீனம், விபத்து மற்றும் பின்போட முடியாத வைத்தியர் தவணை என்பன பாடசாலைக்கு வராமைக்காக மன்னிக்கக் கூடியவை.

2 சுகயீனம் அல்லது விபத்துக் காரணமாக பாடசாலைக்குப் பிள்ளை வராவிடின், வகுப்பாசிரியரினால் பராமரிப்புப் பொறுப்புள்ளவர்களிடம் ஓர் மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் கோரப்படலாம்.

## பிரிவு 3 ஜோக்கர் நாட்கள்

1 ஒரு கல்வி ஆண்டில் பராமரிப்புப் பொறுப்பானவர்கள் தமது பிள்ளையை ஆகக்கூடியது 4 அரைநாட்களே படிப்பிலிருந்து நிற்பாட்ட முடியும். கோடைகால விடுமுறைக்கு சற்று முன்பாகவும் பின்பாகவும் இது செல்லுபடியாகாது.

2 ஜோக்கர் நாட்கள் எடுப்பது பற்றி வகுப்பாசிரியர்க்கு பாராமரிப்புப் பொறுப்பாளரால் வழமையாக ஒரு கிழமைக்கு முன்னதாக எழுத்துமூலம் அறிவிக்கப்படவேண்டும்

## பிரிவு 4 விடுமுறைகளை அனுமதிப்பது, பொறுப்புகள், காலக்கெடு, நிபந்தனைகள்

1 மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு காரணம் காட்டப்பட்டு பாடத்திலிருந்து விடுமுறையளிப்பது ஒரு கல்வி ஆண்டில் மொத்தமாக 15 பாடசாலை நாட்கள் (30 அரை நாட்கள்) அனுமதிக்கப்படலாம். ஜோக்கர் நாட்கள் முதல் 2 விடுமுறை நாட்களுக்குப் பயன்படுத்தப்பட்டு 15 பாடசாலை நாட்களில் ஒரு பகுதியாகக் சேர்க்கப்படும்.

2 காரணம் காட்டப்பட்டு வராமலிருப்பது, விசேடமாக பாடசாலை வராமலிருக்கும் பின்வரும் விடயங்களுக்கு அனுமதிக்கப்படலாம்: குடும்பத்தில் இறப்பு நேரிட்டால்; முக்கியத்துவமான சமய நிகழ்வுகள்; மாணவ மாணவிகள் விளையாட்டுப் போட்டிகளில், கலை மற்றும் அறிவியல் ரீதியான போட்டிகளில் நேரடியாகப் பங்குபெறல்; தன்னார்வத் தொண்டுப் பணியில் ஈடுபடல்; மாணவர் மாறிக்கொள்வது; ஆலோசனை நிலையங்கள் அல்லது திணைக்களங்களுக்குச் செல்வது.

3 தனிப்பட்ட விடயங்களுக்காக பாடசாலை வராமலிருப்பாபது உதாரணமாக ஓய்வுநேரப் பயணங்கள், சுற்றுலா அல்லது விடுமுறைப் பயணங்கள் காரணம் காட்டப்பட்டு வராமலிருப்பதில் அடங்காமல் விடுமுறையாகவே கருதப்படும். இதன்போது ஜோக்கர் நாட்கள் விதிவிலக்காக இருக்கும்.

4 விடுமுறை நாட்களை அனுமதிப்பதற்குப் பொறுப்பு வகிப்பது கல்வித் திணைக்களத்தில் பின்வரும் ஒழுங்கில் மேற்கொள்ளப்படும்:

| விடுமுறை | அனுமதிக்கும் நபர்: | கேட்பதற்கான கால எல்லை: |
|---|---|---|
| முதல் 4 அரைநாட்கள் | வகுப்பாசிரியர் | 1 கிழமை (அறிவித்தல்) |
| (ஜோக்கர் நாட்கள்) --- | | |
| ஏனைய 26 அரைநாட்கள் | பாடசாலை அதிபர் | 2 கிழமைகள் (மனு வழங்குதல்) |

[5] விடுமுறைக்கு மனுக் கொடுப்பதற்கான கால எல்லை குறித்த விதிகளைக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
[6] விடுமுறையை அனுமதிப்பது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும். ஒரு நிபந்தனையை நிறைவேற்றத் தவறினாலும் விடுமுறை அனுமதி மீளப்பெற்றுக்கொள்ளப்படும்.

## பிரிவு 5 நீண்டகால விடுமுறை

எடுக்கும் விடுமுறைநாட்கள் பாடசாலை வருடம் ஒன்றுக்கு 30 அரைநாளுக்கு மேலானதாக இருந்தால் (15 பாடசாலை நாட்கள்) அதற்கு மாநில பாடசாலைக் கண்காணிப்புக்குழுவே பொறுப்பாகும். விடுமுறை தேவை என்ற எழுத்துமூலமான மனு குறைந்தது 20 நாட்களுக்கு முன்னதாக பாடசாலைக் கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்.

## பிரிவு 6 அறிவித்தல் மற்றும் கண்காணித்தல்

[1] வகுப்பாசிரியரால் அறிவிக்கப்படுபவை நேரகாலத்துடன் எழுத்துமூலம் அறிவிக்கப்படும். விடுமுறைநாட்களைக் கோரி அனுப்பும் விண்ணப்பத்திற்கான கால எல்லையைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். பிந்திய கோரல் விண்ணபங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

[2] வகுப்பாசிரியர் பாடசாலைக்குவராத நாட்களைக் குறித்துவைத்து விடுமுறை தேடலின் போது அதையும் அத்துடன் பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைப்பார்.

[3] பாடசாலைக்கு வராமல் இருந்தநாள் அல்லது விடுமுறை நாளுக்கான மன்னிப்புக் கிடைத்தபின்னர், மாணவ மாணவி யும் வகுப்பாசிரியரும் மற்றும் பராமரிப்புப் பொறுப்பாளரும் வராதநாட்களைக் குறிக்கும் புத்தகத்தில் கையொப்பம் இட்டதை ஆதாரப்படுத்த வேண்டும்.

## பிரிவு 7 தொழிற்கல்வி கற்றல்

„தொழிற்கல்விக் காலத்தில்“ விடுமுறை எடுப்பது பற்றிய ஒழுங்கு முறைகள் இந்தப்பாடசாலையின் சட்ட நடவடிக்கைக்குள் சேராது. இவையாவும் மாநிலத்தின் சட்டதிட்டங்களுக்கமைய மேல்வகுப்புக்குப் பொறுப்பான அதிபரால் அங்கீகரிக்கப்படும்.

## பிரிவு 8 தற்காலிகமாக ஒருசில பாடசாலைப் பாடங்களிலிருந்து விடுவித்தல்

சுகயீனம் காரணமாக (மருத்துவச்சான்றிதழ் தேவை) ஓர் குறிப்பிட்ட பாட வகுப்பிற்கு வரமுடியாமல் இருந்தால், வகுப்பாசிரியர் அந்த மாணவ மாணவியை அந்தப்பாடத்திலிருந்து விடுவிக்கலாம். வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்களுடன் சேர்ந்து பேசி, ஏனைய பாடங்களின் போது அவற்றுக்கான பராமரிப்பு வழங்கப்படும்.

## பிரிவு 9 தவறவிட்ட பாடவகுப்புகளை மீளக்கற்றல்

தவறவிட்ட பாடவகுப்புக்களை மீளக்கற்பதற்கு மாணவ மாணவிகள், மற்றும் வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்களே பொறுப்பு வகிப்பார்கள்.

## பிரிவு 10 தண்டித்தல் பற்றியவை

தமது பிள்ளைகளுக்கு மன்னிக்கக்கூடிய காரணம் இல்லாமல் வேண்டுமென்றே ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பாத அல்லது விடுமுறை அனுமதி பெறாமல் பாடசாலையிலிருந்து நிறுத்திவிடும் பெற்றோருக்கு, அதற்கான எச்சரிக்கைத் தண்டனையாக 5000 பிராங்குகள் வரை தீர்க்கப்படலாம். அனுமதி பெறாமல் பாடசாலைக்கு வராத நாட்கள்பற்றி ஆசிரியர் கட்டாயமாகப் பாடசாலை அதிபருக்கு அறிவிக்க வேண்டும்.

## பிரிவு 11 அமுலுக்கு வருவது

இந்த விதிமுறை 3 ஆனி 2016 ஒழுங்குமுறைகளுக்குப் பதிலானது. இது 1 ஆவணி 2018 முதல் அமுலுக்கு வருகின்றது.